# உலக சுற்றுலா தினத்தையொட்டி - நடப்பாண்டில் 17 பிரிவுகளில் விருதுகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, செப்.23-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம் களில் 2023 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை 5 மாதங்களில் மொத்தம் 24,17,436 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் என்றும், நடப்பாண்டு உலக சுற்றுலா தினத்தில் சிறப்பாக செயல்படுபவர்களுக்காக 17 விருதுகள் வழங்கப்படும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (21.09.2023) நடைபெற்றது.

கடந்த 16.9.2023 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தென்னிந்திய சமையல்காரர்கள் சங்கத்தினர் (SICA) நடத்திய சமையல் போட்டியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு சமையலர்கள் 1 தங்கப்பதக்கம் மற்றும் 3 வெள்ளி பதக்கங்களை வென்றனர். இதையொட்டி, தங்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்களை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்களிடம் நேற்று முன்தினம் (21.09.2023) காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சுற்றுலாவை மேம்படுத்த சுற்றுலா வளர்ச்சிக்கு காரணமாக உள்ள நபர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை 2022 ஆம் ஆண்டு முதல் உலக சுற்றுலா தின நிகழ்ச்சியில்



சுற்றுலா விருதுகளை அறிமுகப்படுத்தி வழங்கி வருகிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் என மொத்தம் 17 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப் பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத் தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் உள்ளன.

மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2022-2023-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023-2024-ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை 5 மாதங்களில் மட்டும் மொத்தம் 24,17,436 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை மேலும் வளர்ச்சியடைய சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைந்து முடிவடையும் வகையில் அலுவலர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு உள்ஒதுக்கீடு வழங்கி

# மகளிர் இடஒதுக்கீட்டை உடனே அமல்படுத்துக!

## ராகுல்காந்தி வலியுறுத்தல்

புதுடெல்லி, செப்.23-

மகளிர் இட ஒதுக்கீட்டில் OBC பிரிவினருக்கு உள் ஒதுக்கீடு வழங்கி உடனடியாக சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும், நாடு முழுவதும் புதிதாக சாதிவாரி கணக்கெடுப்பை உடனே நடத்த வேண்டும் என்றும் ஒன்றிய பா.ஜ.க .அரசை காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் நிறைவேற்றப்பட்டு நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது பேசிய அவர், மகளிர் இடஒதுக்கீடு மசோதா பெயரளவில் மட்டுமே நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும், இது அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு தான் அமலுக்கு வரும் என்று ஒன்றிய பா.ஜ.க . அரசு கூறுவது, மக்களை திசை திருப்பும் செயல் என்று குற்றம்சாட்டி னார்.



ஒன்றிய அரசில் உள்ள 90 துறை செயலாளர்களில் 3 பேர் மட்டுமே ஓ.பி.சி பிரிவினர் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக உழைப்பதாக கூறும் பிரதமர் மோடி, அவர்களுக்கு செய்தது என்ன என்று வினவினார்.

மகளிர் மசோதாவில் உள்ள தொகுதி வரையறை மற்றும் சாதிவாரி கணக்கெடுப்பை நீக்கி விட்டு உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். புதிதாக சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தினால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றும், அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனே மேற்கொள்ள வேண்டும் என்றும் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

### தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

# மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - துணை ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - துணை ஒருங்கிணைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

ஏற்கனவே திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட இரா. ஆதிபரமேஸ்வரன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்குப் பதிலாக **திரு.எஸ். பிரேம்ஆனந்த், பி.எஸ்சி.,** (43டி, கடையத் தெரு,சேரன்மாதேவி, திருநெல்வேலி மாவட்டம்.) அவர்கள் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராகவும்,

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாள(களப்பணி)ராக திரு. ஜெ.நெவில் ஆர்ச்பால், (நாங்குநேரி), (8/48, வடக்குத் தெரு, ஆரைக்குளம்,முன்னீர்பள்ளம்.)அவர்களும்நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திருநெல்வேலி மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளை, அவர்கள் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக பின்வரும் நிர்வாகிகள் புதியதாக நியமிப்படுகிறார்கள். இவர்கள் தொடர்ந்து செயல்படுவார்கள்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - **திருமதி துரை சக்தி கீதா,** 3, வசந்தம் நகர், பெருமாள்புரம், திருநெல்வேலி - 627 007.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள்- சூ.அ.பிரபாகர், 8/319,அம்மன்கோவில்மேல்பகுதி,துறையூர்,கங்கைகொண்டான், திருநெல்வேலி மாவட்டம் - 627 352. சுவாதி எம்.சிவகுமார், எம். சி.ஏ., 921ஏ, மதுரை ரோடு, கோமதி நகர், திருநெல்வேலி - 627 001. ஜெ. ஸ்ரீராம், 633ஏ, காவேரி சாலை, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி - 627 006. எஸ்.பி.இம்ரான்கான், 15ஏ, பெரிய கொத்பா பள்ளிவாசல்தெற்கு கீழத் தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி - 627 005. (சமூகவலைதளம்)காசிமணி, திருநெல்வேலி. (மகளிர்)கே.எஸ்.எஸ்.சேகனா, 119, பரசுராமபுரம் தெரு, கடையநல்லூர்.

**தூத்துக்குடி தெற்கு மாவட்டம்**

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட திவாகர்சாம் அவர்கள், சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக, **திரு. எம். மாசாணசெல்வம்** (14/4ஏ, தெற்கு தெரு, திருவைகுண்டம், தூத்துக்குடி-28 601) அவர்கள் தூத்துக்குடி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**சிவகங்கை மாவட்டம்**

சிவகங்கை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட ராஜமூர்த்தி அவர்கள், சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக,

திரு.**எஸ்.ஆர். வினோத்** (239, புக்குளம், கல்லடித் திடல் அஞ்சல், இளையான்குடி தாலுக்கா, சிவகங்கை மாவட்டம்) அவர்கள் சிவகங்கை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**பெரம்பலூர் மாவட்டம்**

பெரம்பலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக **திரு. சி.இரா. விஜய்** (226, மாரியம்மன் கோவில் தெரு, புதுவேலூர், வேலூர் அஞ்சல், பெரம்பலூர் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**திருவள்ளூர் மேற்கு மாவட்டம்**

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜி.எம்.கிஷோர் அவர்கள், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் (சமூக வலைதளம்) ஆகவும் - **திரு. எஸ்.குமரன்** (எம்.ஜி.ஆர்.நேகர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

**இராணிப்பேட்டை மாவட்டம்**

இராணிப்பேட்டை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட பிரபாகரன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக, **திரு. ப.ராம்கி, டி.டி.எட்., எம்.ஏ., பி.எல்.,** (32, பிள்ளையார் கோவில் தெரு, காட்டுப்பாக்கம், நெமிலி வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம்) அவர்கள் இராணிப்பேட்டை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**சேலம் மேற்கு மாவட்டம்**

சேலம் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.செல்வராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக, **திரு. வே.பூபதி** (1/169, முனியம்பட்டி, வெள்ளாளபுரம், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் - 636 306.) அவர்கள் சேலம் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**விருதுநகர் வடக்கு மாவட்டம்**

விருதுநகர் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கார்த்திகேயன் அவர்களுக்குப் பதிலாக **திரு. எஸ்.அருண்குமார்,** (1/237, செவலூர், புதுக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்) அவர்களும்,

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக திரு.எம்.ஆறுமுகம், (4/17, கட்டலாங்குளம், எஸ்.மரைக்குளம் - 626 607, திருச்சுழி, விருதுநகர் மாவட்டம்) அவர்களும், நியமிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 21-09-2023

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

### கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரம்மாண்ட வரவேற்பு; அலைகடலெனத் திரண்டு வாரீர்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை

கிருஷ்ணகிரி, செப். 23-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும்,

இளைஞர்களின் எழுச்சி நாயகனுமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்று முதல் முறையாக வருகிற 25 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறும் அனைத்துத் துறை அதிகாரிகளுக்கான ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.



இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பெங்களூரு சாலையில் மாவட்ட தி.மு.க. அலுவலகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள படிப்பகத்தை திறந்து வைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த 20 அணிகளின் சார்பாக பிரம்மாண்டமான வரவேற்பளித்து வழிநெடுகிலும் தி.மு.க. கொடி ஏந்தி, தாரை, தப்பட்டை முழுங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறார்.

தொடர்ந்து கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹாலில் நடைபெற உள்ள கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கிழக்கு மாவடத்தில் உள்ள கழக மூத்த முன்னோடிகள் 1800 பேருக்கு தனது திருக்கரங்களால் பொற்கிழி வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

இதனை தொடர்ந்து ஸ்ரீ தேவராஜ் மஹால் வளாகத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட இளைஞர் அணி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்ற உள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சித் தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணியினர்,

BLA 2, பூத் கமிட்டி, கிளைக் கழக செயலாளர், திராவிட முன்னேற்ற கழக தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, பிரமாண்ட வரவேற்பு அளித்து அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட கழகத்தின் சார்பாக மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் காதர் கிராம வாரியத்தொழில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜா கண்ணப்பன், முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் செ.முருகேசன் எம்.எல்.ஏ., எம்.எஸ்.கே.பவானி ராஜேந்திரன், ஊ.திசைவீரன், ஆர்.கே.கார்மேகம்,டி.ஆர்.பிரவீன் தங்கம், நாசர் கான், சேதுகருணாநிதி, கே.டி.பிரபாகரன், மிஷா அகமது தம்பி, குணசேகரன், சத்யா குணசேகரன், குணசேகரன், சுதிநன்,கே.ஜே.பிரவீன், முத்துக்குமார், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

# தூத்துக்குடியில் அமைச்சர் கே.என்.நேரு - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

## வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிவிப்பு!



தி.மு.கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி ஆகியோர் தூத்துக்குடியில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் விபரத்தை - வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன்அறிவித்துள்ளார்.

**நாள்: 30.9.2023 - சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி விபரம் | நிகழ்ச்சி நடைபெறும் இடம் |
|---|---|---|
| காலை 7.00 மணி | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்தல் | அண்ணாச்சி என்.பெரியசாமி திடல் மீளவிட்டான் - தூத்துக்குடி |
| காலை 8.30 மணி | STEM PARK - திறப்பு விழா | அம்பேத்கர் நகர் - தூத்துக்குடி |
| காலை 9.00 மணி | ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அண்ணா பேருந்து நிலையம் திறப்புவிழா மற்றும் புதிய பள்ளிக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டுதல், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | அண்ணா பேருந்து நிலைய வளாகம் - தூத்துக்குடி |

**அமைச்சர் பெ.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர்அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தஞ்சை மத்திய மாவட்டம்**

தலைவர் - வி. பாஸ்கரன், பாலையப்பட்டி தெற்கு, பூதலூர், தஞ்சாவூர் மாவட்டம்

துணைத் தலைவர் - ஆர்.கே. நாகராஜன், 8வது தெரு, அருளானந்தம்மாள் நகர், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எஸ். சுந்தபாண்டியன், 2959-3, தெற்கலங்கம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - என். சண்முகநாதன், கவாஸ்காரத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர் மாவட்டம். எஸ். அன்பழகன், குருமன்தெரு, தெலுங்கன்குடிகாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். கே. ஸ்டாலின்ராஜன், அம்பலக்காரத் தெரு, வேதியபுரம், ராஜேந்திரம், தஞ்சாவூர் மாவட்டம். ஏ.கே. மலர்வண்ணன், குருமன்தெரு, தெலுங்கன்குடிகாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். பி.வி.ஆர். சதீஷ், காயிதேமில்லத்நகர், ஆர்.எம்.எஸ். காலனி, விளார், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 21-09-2023

**காசி முத்து மாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

### தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (ஐந்தாவது பட்டியல்)

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர்அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**நீலகிரி மாவட்டம்**

தலைவர் - கேஜெயக்குமாரி ராம்சந்சதுக்கம், கோத்தகிரி, நீலகிரி.

துணைதலைவர்- எம்.வாணீஸ்வரி, பீட்டன்ஸ்சாலை, உதகை, நீலகிரி.

அமைப்பாளர் - **எஸ்.கோமதி,** ஒளிமடா, கொளப்பள்ளி, பந்தலூர்,நீலகிரி.

துணைஅமைப்பாளர்கள் - எஸ்.பரிமளா, 11/15 பி, நந்தட்டி, கூடலூர், நீலகிரி. எஸ்.வெண்ணிலா, 8/7டிக்கு, கெவிப்பாறைசாலை, கூடலூர், நீலகிரி. எஸ்.நாகமணி, பட்பயர், உதகை, நீலகிரி. எ.எம். மைமூனா, நெலாக்கோட்டை, பந்தலூர், நீலகிரி. எம்.எஸ். தமிழ்வாணி, போர்த்தியாடா, இத்தலார், நீலகிரி. எம்.பிரபாவதி, சண்முகாஇல்லம், ரெயிலிகாம்பவுண்டு, குன்னூர், நீலகிரி. சி.சிவகாமி, 1/76, குன்றில்கடவு, உப்பட்டி, நீலகிரி. கௌரி, பொக்காபுரம், மசினகுடி, நீலகிரி. ப.வள்ளி, செருமுள்ளி, தேவர்சோலை, நீலகிரி. வலைதளபொறுப்பாளர்கள் - டி.ராஜேஸ்வரி, 14/110, தேனாடுபெங்கால்மட்டம், உதகை, நீலகிரி. பி.சுசீலா, குரும்பாடிகிராமம், பாலியாறு, நீலகிரி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 21-09-2023

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் அணி